OS 347/2021
வா.சா.1 போஸ் த/பெ பச்சையப்பன்
நாள் 23.09.2025

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. எனக்கு படிக்க தெரியாது. கையெழுத்து போடுவேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் எனது கையொப்பம் இருக்கிறதா என்றால் சாட்சி மீண்டும் எனக்கு படிக்க தெரியாது என்று கூறுகிறார். வழக்கு சொத்து பொறுத்து நானும் எனது தம்பி கோபால் மற்றும் வடிவேல் மற்றும் ராமு ஆகியோர் 27.09.1993ல் பாகம் குறித்து கூறு சீட்டு எழுதி கொண்டோம் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் உள்ளது எனது கையொப்பமா என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வழக்குரையில் உள்ளது எனது கையொப்பமா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொறுத்து ஏற்கனவே 1993ல் மற்றும் 2005ல் பாகப்பிரிவினை செய்து கொண்டு அதன்படி அனுபவித்து வருகிறோம் என்றால் இல்லை. எனது பாகத்திற்கு வந்த சொத்தை 2005ல் ஆதிதிராவிடர் நலத்துறைக்கு 2 ஏக்கர் நிலம் விற்பனை செய்துவிட்டேன் என்றால் அவர்களாகவே எழுதி கொண்டார்கள் நான் ரிஜிஸ்டர் செய்யவில்லை. எனக்கு பிரின்ஸ் என்று ஒரு மகன் இருக்கிறார்.

2. 4 முதல் 7 பிரதிவாதிகள் எனது அண்ணன் மக்களா என்றால் எனக்கு நியாபகம் இல்லை. 4 முதல் 7 பிரதிவாதிகள் கிடைத்த பாக சொத்தை எனது மகன் பிரின்ஸ் வாங்கிவிட்டார் என்றால் தெரியாது. தாவா சொத்து சம்மந்தமாக ஏற்கனவே பாகப்பிரிவினை நடந்துவிட்டது என்றாலும் அதன்படி பட்டா பெற்று அனுபவித்து வருகிறோம் என்றாலும் சரியல்ல. பாகப்பிரிவினை சொத்தை நானும் விற்பனை செய்துவிட்டேன் என்றாலும் பிரதிவாதிகளும் விற்பனை செய்துவிட்டார்கள் என்றாலும் சரியல்ல. ஏற்கனவே பாகம் பிரித்ததால் தான் சொத்தை 3ம் நபர்களுக்கு விற்பனை செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி உண்மைகளை மறைத்து பொய்யான இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.